தினத்தந்தி

23 JUL 2025



எலச்சிபாளையம் வட்டாரத்தில்

## 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமை கலெக்டர் ஆய்வு

திருச்செங்கோடு, ஜூலை.23-
நாமக்கல் மாவட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வருகிறது. இம்முகாமானது 3 கட்டங்களாக நடைபெறுகிறது. அதன்படி நாமக்கல் மாநகராட்சியில் பதிநகர் மாநகராட்சி தொடக்கப்பள்ளி, புறநகர் பகுதியில் ஆர்.புதுப்பாளையம் சமுதாயக்கூடம், எலச்சிபாளையம் வட்டாரத்தில் புத்தூர் ஈஸ்வரன் கோவில் மண்டபம், எருமப்பட்டி வட்டாரத்தில் தேவராயபுரம் கிராம சேவை மையக்கட்டிடம், மோகனூர் வட்டாரத்தில் பேட்டபாளையம் அண்ணா கலையரங்கம், திருச்செங்கோடு வட்டாரத்தில் பரமசிவகவுண்டம்பாளையம் சமுதாயக்கூடம் ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

இந்தநிலையில் நாமக்கல் மாநகராட்சியில் பதிநகர் மாநகராட்சி தொடக்கப் பள்ளி மற்றும் எலச்சிபாளையம் வட்டாரத்தில் புத்தூர் ஈஸ்வரன் கோவில் மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமை நாமக்கல் மாவட்ட கலெக்டர் துர்கா மூர்த்தி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது உடனடி தீர்வாக பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு நாமக்கல் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். தொடர்ந்து நாமக்கல் வட்டம் பாப்பநாயக்கன்பட்டி ஊராட்சி பகுதியில் ஆட்சேபனையற்ற குடியிருப்புகளில் 5 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வரும் பொதுமக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்குவது குறித்து கள ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது அட்மா குழு தலைவர் எலச்சிபாளையம் தங்கவேல் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

தினகரன் 23 JUL 2025

தேவராயபுரம் ஊராட்சியில்

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் நலத்திட்ட உதவி

## பொன்னுசாமி எம்எல்ஏ வழங்கினார்



▶ தேவராயபுரம் ஊராட்சியில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை பொன்னுசாமி எம்எல்ஏ வழங்கினார்.

சேந்தமங்கலம், ஜூலை 23: எருமப்பட்டி அருகே நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை பொன்னுசாமி எம்எல்ஏ வழங்கினார்.

எருமப்பட்டி ஒன்றியம், தேவராயபுரம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் கிருஷ்ணவேணி தலைமையில் நேற்று நடந்தது. தாசில்தார் வெங்கடேஸ்வரன் முன்னிலை வகித்தார். வரகூர் மற்றும் தேவராயபுரம் ஊராட்சி பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித் தொகை, மின் இணைப்பு பெயர் மாற்றம், நிலம் அளவீடு செய்தல், புதிய குடிநீர் குழாய், கலைஞர் கனவு இல்லம் வீடு, மகளிர் உரிமைத் தொகை, பட்டா மாறுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை வழங்கினர். இதில், உடனடியாக மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதில் பொன்னுசாமி எம்எல்ஏ கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பத்மநாபன், ஐடி தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஞானசேகரன், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் மகாமுனி உள்ளிட்ட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தினகரன்
23 JUL 2025

எலச்சிப்பாளையத்தில்

# உங்களுடன் ஸ்டாலின் முகாமில் நலஉதவிகள்



எலச்சிப்பாளையத்தில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் தங்கவேல் உள்ளார்.

## கே.எஸ்.மூர்த்தி வழங்கினார்

திருச்செங்கோடு, ஜூலை 23: எலச்சிப்பாளையத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் திமுக மாவட்ட பொறுப்பாளர் கே.எஸ். மூர்த்தி பங்கேற்று, நல உதவிகளை வழங்கினார்.

நாமக்கல் மாவட்டம், எலச்சிப்பாளையம் ஒன்றியத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது. முகாமினை நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி தொடங்கி வைத்தார். எலச்சிப்பாளையம் மற்றும் சுற்றுப்புற பகுதியைச் சேர்ந்த திரளான மக்கள் பங்கேற்று, கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கினர். அதன் மீது சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் விசாரித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாவட்ட பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சியில், ஒன்றிய திமுக செயலாளர் தங்கவேல், பிடிஓ.க்கள் லோகமணிகண்டன், பிரகாஷ், உதவித் திட்ட அலுவலர் இன்பராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினகரன்

23 JUL 2025

### சிராப்பள்ளியில் 29ம் தேதி

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்

நாமகிரிப்பேட்டை, ஜூலை 23: சிராப்பள்ளியில் வரும் 29ம் தேதி நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்குமாறு வீடு, வீடாக சென்று அழைப்பு விடுக்கப்பட்டது.

நாமகிரிப்பேட்டை அருகே சிராப்பள்ளி பேரூராட்சி சார்பில் வரும் 29ம் தேதி (செவ்வாய்க்கிழமை) உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெறுகிறது. இம்முகாமில் பங்கேற்கும் பொதுமக்களுக்கு உதவி செய்யும் வகையில், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்கள் மூலம் வீடு, வீடாக சென்று விண்ணப்பம் வழங்கியும், தேவையான ஆவணங்களை கொண்டு வர வேண்டியும் அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

மேலும், தமிழக அரசின் நான்காண்டு சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்கள், சிராப்பள்ளி பேரூராட்சி சார்பில் பொதுமக்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில், பேரூராட்சி தலைவர் லோகாம்பாள், துணைத்தலைவர் செல்வராஜு, செயல் அலுவலர் அண்ணாமலை மற்றும் வார்டு கவுன்சிலர்கள் சண்முகசுந்தரம், நாகரத்தினம், சங்கீதா, கவியரசி, விஜயலட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.